In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi
Case No : Spl.CC.2/2021
Deposition of P.W.1
****

Name திரு.பாண்டியன்

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 05th day of October 2023

**Accused A1 to A4 present.**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் தற்போது தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் இளமின் பொறியாளராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு ஸ்ரீவைகுண்டம் வட்டம், வல்லநாடு தமிழ்நாடு மின்வாரிய அலுவலகத்தில் இளமின் பொறியாளராக பணிபுரிந்தேன். 02.01.2015 ம் தேதி அதிகாலை 01.00 மணியளவில் பக்கம்பட்டி மின்மாற்றியில் கரண்ட் கட் ஆனது. அதனால் பக்கம்பட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம மக்கள் மின்சாரம் தடைப்பட்டுள்ளதாக புகார் சொன்னார்கள். அதன்பிறகு வயர்மேன் முனியசாமி பக்கம்பட்டி மின்மாற்றிக்கு சென்று பார்த்துவிட்டு மின்மாற்றியில் உள்ள காப்பர் கம்பி திருடு போய் உள்ளதாக என்னிடம் போன் மூலம் சொன்னார். நான் 02.01.2015 ம் தேதி காலை 06.00 மணிக்கு சென்று மின்மாற்றியை பார்த்தேன். காப்பர் கம்பி திருடு போய் இருந்ததை பார்த்து உடனடியாக உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தேன். 02.01.2015 அன்றே நான் முறப்பநாடு காவல் நிலையத்திற்கு சென்று எழுதிக் கொடுத்தேன். அதன்பிறகு உயர் அதிகாரிகள் முதல் தகவல் அறிக்கை நகல் கேட்டதால் நான் முறப்பநாடு காவல் நிலையம் சென்று முதல் தகவல் அறிக்கை நகல் கேட்டேன். காவல் நிலையத்தில் மீண்டும் புகார் கொடுக்க சொன்னதால் நான் 04.03.2015 அன்று புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

கம்பியாளர் முனியசாமி என்னிடம் புகார் எதுவும் எழுத்துமூலமாக கொடுக்கவில்லை. மின்சாரம் தடைப்பட்டுள்ளதாக பொதுமக்கள் என்னிடம் எழுத்துமூலமாக புகார் கொடுக்கவில்லை, ஆனால் வாய்மொழியாக என்னிடம் புகார் சொன்னார்கள். 02.01.2015 ல் கொடுத்த புகாரில் முனியசாமி பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 02.01.2015 ம் தேதி கொடுத்த புகாரின் கடித எண் வேறு என்றால் சரிதான். அ.சா.ஆ.1 ல் நான் பக்கம்பட்டி மின்மாற்றியை 02.01.2015 ம் தேதி பார்வையிட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். களவு போன காப்பர் கம்பிகள் இவ்வழக்கில் மீட்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. எங்கள் மின்வாரிய ஊழியரை பாதுகாக்க பொய்யாக அ.சா.ஆ.1 புகாரை யோசனை செய்து கொடுத்தோம் என்றால் சரியல்ல. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி/எதிரிகள் தரப்பு முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

Sd/-M.Selvam,

**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**

**தூத்துக்குடி.**